ADDITIONAL CONTROLLER OF EXAMINATIONS ★ AU CHENNAI 600 025

**Roll No.** | | | | | | | | | | |

# ANNA UNIVERSITY (UNIVERSITY DEPARTMENTS)

## B.E. / B. Tech (Full Time) - END SEMESTER EXAMINATIONS, NOV/DEC 2024

COMMON TO ALL BRANCHES

I Semester

**PH23C01 பொறியியல் இயற்பியல்**

(Regulation 2023)

(Answer all the questions)

Time: 3hrs | Max. Marks: 100

| | |
|---|---|
| CO 1 | Understand the significance of crystal structure and bonding. Learn to grow crystals. |
| CO 2 | Obtain knowledge on important mechanical and thermal properties of materials and determine them through experiments. |
| CO 3 | Conceptualize and visualize the oscillations and sound. |
| CO 4 | Grasp optical phenomenon and their applications in real life. |
| CO 5 | Appreciate and evaluate the quantum phenomenon. |

**BL – Bloom's Taxonomy Levels**

(L1 - Remembering, L2 - Understanding, L3 - Applying, L4 - Analysing, L5 - Evaluating, L6 -Creating)

**PART- A (10x2=20Marks)**

(Answer all Questions)

| Q.No. | Questions | Marks | CO | BL |
|---|---|---|---|---|
| 1 | இட அணிக்கோவையை வரையறுக்கவும். | 2 | CO1 | L1 |
| 2 | ஒரு பொருள்மைய கனசதுர கட்டமைப்பில், (110) தளங்களுக்கு இடையே உள்ள தொலைவு 0.203nm என்றால், அதன் அணு ஆரம் யாது? | 2 | CO1 | L5 |
| 3 | எஃகு கர்டர்கள் I வடிவமைப்பில் செய்யப்படுவது ஏன்? | 2 | CO2 | L2 |
| 4 | பரப்பு இழுவிசை என்றால் என்ன? | 2 | CO2 | L1 |
| 5 | ஒலியின் தீவிரம் இரு மடங்காக அதிகரிக்கையில், செவிப்புலன் (அகோஸ்டிக்) தீவிரத்தின் அதிகரிப்பை கணக்கிடுக. | 2 | CO3 | L5 |
| 6 | திண்மப் பொருட்களில் வெப்பப் பரிமாற்றம், கடத்தல் வழியாக எவ்வாறு நடந்தேறுகிறது? | 2 | CO3 | L2 |
| 7 | குறைக்கடத்தி ஊடொளியில் (செமிகண்டக்டர் லேசர்), மின்னணுக்களின் குழு உயர் ஆற்றல் நிலை (தலைகீழ் தொகை) எவ்வாறு இடைநிறுத்தபடுகிறது? | 2 | CO4 | L2 |
| 8 | ஒரு ஒளியிழையின் எண் துளை 0.39 ஆகும். அச்சுளிற்கும் (core) அச்சுறைக்கும் (cladding) உள்ள ஒளிவிலகல் குறிப்பெண்களின் வேறுபாடு 0.05 என்றால், அச்சுள்ளின் ஒளிவிலகல் குறிப்பெண் யாது என்பதனை கணக்கீடுக. | 2 | CO4 | L5 |
| 9 | ஒரு மின்னணு 220m/s திசைவேத்தில் நகர்வதை 0.005% துல்லியத்துடன் அளவிடப்பட்டுள்ளது. மின்அணுவின் அமைவிடத்தின் அறுதியின்மையை கணக்கிடுக. | 2 | CO5 | L5 |
| 10 | குவாண்டம் தடை ஊடுருவல் (tunneling) என்றால் என்ன? | 2 | CO5 | L2 |

ADDITIONAL CONTROLLER OF EXAMINATIONS ★ AU CHENNAI 600 025

## PART- B (5x13=65Marks)

| Q.No. | Questions | Marks | CO | BL |
|---|---|---|---|---|
| 11(a)(i) | முகமைய கனசதுரம் (FCC) மற்றும் அறுகோண நெருக்கப்பொதிவு (HCP) கட்டமைப்புகளுக்கு ஒரே அணுப்பொதிவுக் கூறு என்பதனை காட்டுக. | 9 | CO1 | L2 |
| (ii) | ஒரு படிகத்தில், விளிம்பு மற்றும் திருகு இடப்பெயர்வுகளைப் பற்றி விவரிக்கவும். | 4 | CO1 | L2 |
| | OR | | | |
| 11(b)(i) | சோக்கர்லாஸ்கி (Czockrlaski) முறையான படிகங்களின் வளர்ச்சியை, ஒரு தெளிவான வரைபடத்துடன் விளக்கவும். அவ்வளர்ச்சி முறையின் நன்மைகளையும் குறிப்பிடுக. | 9 | CO1 | L2 |
| (ii) | மூலக்கூறு கற்றை எபிடாக்ஸி (MBE) பற்றி குறிப்பெழுதுக. | 4 | CO1 | L2 |
| | | | | |
| 12(a)(i) | ஒரு வளை சட்டம் (cantilever) முடிவில் உட்படுத்தப்படும் சுமையின் காரணமாக உருவாகும் வளைத் தாழ்விற்கு ஒரு வெளிப்பாட்டினை பெறவும்.<br>அவ்வெளிப்பாட்டைப் பயன்படுத்தி ஒரு பொருளின் கற்றை மற்றும் கம்பி வடிவுகளுக்கு, யங்கின் மட்டு (Young's modulus) யாது என்பதனை கண்டுபிடிக்கவும். | 9 | CO2 | L4 |
| (ii) | 0.8m தொலைவில் அமைக்கப்பட்டுள்ள கூர்முனை தாங்கிகளின் மேல், 14mm விட்டம் கொண்ட ஒரு உருளை கம்பியின் மையப்புள்ளியில் 1kg சுமை இடைநிறுத்தப்பட்டுள்ளது. கம்பிப் பொருளின் யங்கின் மட்டு 204GPa என்றால், கம்பியின் எடையைப் புறக்கணித்து, அதன் மையப்புள்ளியில் உருவாகும் வளைத்தாழ்வினை கணக்கிடுக. | 4 | CO2 | L5 |
| | OR | | | |
| 12(b)(i) | ஒரு மெல்லிய உருளை முறுக்கப்படுகையில், அலகு முறுக்குக்கான முறுக்குவிசையின் ஒரு வெளிப்பாட்டினை தேவையான கோட்பாட்டுடன் பெறவும். | 9 | CO2 | L4 |
| (ii) | 7.0 cm ஆரம் கொண்ட 500g சீரான கோளம் அதன் மையத்தின் வழியாக ஒரு அச்சில் 30 சுற்றுகள்/வினாடி (rev/sec) வேகத்தில் உராய்வின்றி சுழல்கின்றது. அதன் சுழற்சி இயக்க ஆற்றல், கோண உந்தம் மற்றும் சுழல் ஆரம் ஆகியவற்றைக் கண்டறியவும். | 4 | CO2 | L5 |
| | | | | |
| 13(a)(i) | அதிர்வுகள், தணிக்கப்பட்ட அதிர்வுகள், கட்டாய அதிர்வுகள் மற்றும் ஒத்ததிர்வு (resonance) பற்றி விளக்குக. ஒத்ததிர்வின் கூர்மை எவ்வாறு தணித்தல் பண்பிணை சார்ந்துள்ளது? | 9 | CO3 | L3 |
| (ii) | 6.0 kg எடை கொண்ட ஒரு துகள் சுருள்வில்லின் தாக்கத்தால் x அச்சின் நெடுகில் எளிய இசை இயக்கத்துடன் செயல்படுகிறது. அந்த துகள் $x = 0.20\cos(3.0t)$ சமன்பாட்டின் அடிப்படையில் நகர்கின்றது, அதில் x மீட்டரிலும், t வினாடிகளிலும் அளவிடப்பட்டுள்ளது. அதிர்வெண் மற்றும் அதிகபட்ச இயக்க வேகம் யாது? மேலும் சுருள்வில்லின் சுருள் மாறிலியைக் கண்டடைக. | 4 | CO3 | L5 |
| | OR | | | |
| 13(b)(i) | டாப்ளர் விளைவு (Doppler effect) என்றால் என்ன? இரத்த ஓட்டத்தின் திசைவேகத்தை அளவிட டாப்ளர் பெயர்ச்சி நுட்பம் எவ்வாறு பயன்படுகிறது என்பதனை கோட்பாட்டுடன் விளக்குக. | 9 | CO3 | L3 |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | இரண்டு உலோக கம்பிகள் A மற்றும் B ஆரம்ப நீளங்களை 2:3 விகிதத்திலும், நேரியல் விரிவாக்கத்தின் குணகம் 3:4 என்ற விகிதத்திலும் கொண்டுள்ளது. அவை ஒரே வெப்பநிலையில் சூடுபடுத்தப்பட்டால், அவற்றின் நேரியல் விரிவாக்க விகிதத்தை கணக்கீடுக. | **4** | CO3 | L5 |
| | | | | |
| 14(a) | மைக்கல்சன் குறுக்கீட்டுமானியின் கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டை விளக்குக. அதில் பல்வேறு வகையான விளிம்புகளின் உருவாக்கத்தை பற்றியும் விவாதிக்கவும். | **13** | CO4 | L3 |
| | **OR** | | | |
| 14(b) | $CO_2$ மூலக்கூற்றில் உள்ள அதிர்வு முறைகளை விளக்குக. $CO_2$ ஊடொளியின் ($CO_2$ laser) கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டை தேவையான வரைபடங்களுடன் விவரிக்கவும். | **13** | CO4 | L3 |
| | | | | |
| 15(a) | நேரம் சார்ந்த மற்றும் நேரச் சார்பற்ற ஷ்ரோடிங்கரின் அலைச் சமன்பாட்டிற்கான வெளிப்பாட்டைப் பெறவும். அலைச் செயல்பாட்டின் 'ψ' இயற்பியல் முக்கியத்துவத்தையும் விளக்குக. | **13** | CO5 | L4 |
| | **OR** | | | |
| 15(b) | L நீளமும், எல்லையற்ற ஆழமும் கொண்ட 1-D ஆற்றல் கிணற்றில் உட்பட்டு அமைவுறுத்தப்பட்ட ஒரு மின்னணுவின் ஆற்றல் குவாண்டமாக்கல் தன்மை கொண்டவை என்பதை காட்டுக. கட்டற்ற மின்னணுக்களின் அலைச் செயல்பாட்டினையும் கண்டடைக. | **13** | CO5 | L4 |

## PART- C (1x15=15Marks)

(Q.No.16 is compulsory)

| Q.No. | Questions | Marks | CO | BL |
|---|---|---|---|---|
| 16 (i) | ஆப்பு வடிவ மெல்லிய காற்று படலத்தில், குறுக்கீட்டு விளிம்புகளின் உருவாக்கத்தை விவாதிக்கவும். ஆப்பு வடிவ காற்று படலத்தை கொண்டு, ஒரு மெல்லிய கம்பியின் தடிமனை தீர்மானிக்கும் முறையை விவரிக்கவும். | **10** | CO4 | L3 |
| (ii) | கரும்பொருள் என்றால் என்ன? கரும்பொருள் கதிர்வீச்சு பற்றிய பிளாங்கின் (Planck) கருதுகோளினை விவாதிக்கவும். | **5** | CO5 | L2 |

ADDITIONAL CONTROLLER OF EXAMINATIONS
AU CHENNAI 600 025